**பெறுகைக்கான அழைப்பு**
**இலங்கை புகையிரத சேவை**

**<u>Calypso விசேட புகையிரதத்தின் உணவகத்தை குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக் குழு விலைமனுக் கோரல்</u>**

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் **<u>Calypso விசேட புகையிரதத்தின் நடமாடும் உணவகத்தில்</u>** உணவு பண்டங்களை விற்பனை செய்வதற்காக இரு வருட காலத்திற்கு குத்தகை அடிப்டையில் நடாத்திச் செல்ல தகைமைகளை கொண்ட தரப்பினரிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட பெறுகை விலைமனுக்கள் கோரப்படுகின்றன .

01. <u>தகைமைகள்</u>

- இந்த உடன்படிக்கைக்கு ஏற்புடைய வியாபாரம் அல்லது நிறுவனம், வியாபார பெயர் பதிவின் கீழ் /நிறுவன பதிவின் கீழ் , இலங்கையினுள் பதிவு செய்யப்பட்டு செல்லுபடியான சான்றிதழ் இருத்தல் வேண்டும்.
- அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும்/நிறுவனங்களுக்கும் சுற்றுலா சபையின் செல்லுபடியான பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் காணப்பட வேண்டும். (கேள்வி ஆவணங்களை சமர்ப்பிக்கும் திகதிக்கு)
- உணவகத் துறையில் சேவை வழங்கல் தொடர்பில் குறைந்த பட்சம் ஒரு வருட கால அனுபவம்
- நிதி உறுதிப்பாட்டனை உறுதிப்படுத்துதல் தொடர்பில் போதியளவான ஆவணங்கள் குத்தகைக்காரரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். .

02. <u>கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளல்.</u>

பெறுகை ஆவணங்களை 2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத விற்பனை மற்றும் சந்தைபடுத்தல் அலுவலகத்தில் பெற்று கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தரிற்கு மீளளிக்கப்படாத கேள்விபடிவக் கட்டணமாக ரூ.2,500/- தொகையைச் செலுத்தி பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரதி அத்தியட்சகரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அவ் அட்டணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்வி பிணையொன்றும் செலுத்தப்படவேண்டும்.

03. <u>கேள்வி விண்ணப்பங்கள் சமர்ப்பித்தல்</u> .

Calypso விசேட புகையிரதத்தின் நடமாடும் உணவகம் சார்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்திசெய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல்மூலையில், " Calypso விசேட புகையிரதத்தின் நடமாடும் உணவகத்தினை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி பி.ப 2.00 முன்னதாக கிடைக்கக் கூடியதாக தலைவர் , திணைக்கள பெறுகைக்குழு , விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம் , புகையிரத தலைமையகம் ஓல்கோர்ட் மாவத்தை , கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் பிரதி அத்தியட்சகர் (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்) இன் உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியிலோ உள்ளிடலாம். அந்நேரத்தின் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

04. <u>கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்</u>.

2024 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27 ஆம் திகதி பி.ப 2.00 க்கு மேற்கூறிய மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரியோ அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதியோ சமூகமளிக்க அனுமதிக்கப்படும்.

05. கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்கூறப்பட்ட ஏற்புடைய புகையிரத நடமாடும் உணவகத்தை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பங்கள் அளிக்கப்படும். அத்துடன் அதற்காக குறித்த புகையிரத நிலையத்தில் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

06. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

08. கேள்விதாரர்களுக்கு தேவையான மேலதிக விபரங்களை இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு - 8235, பெக்ஸ் - 011 2431909) /011-4600944

தலைவர்,
திணைக்கள பெறுகைக்குழு ,
புகையிரத தலைமையகம்,
ஓல்கோர்ட் மாவத்தை ,
கொழும்பு 10